நல்லூர்க் கந்தசுவாமி
கோவில் உற்சவத்தில்
மலிவு விற்பனை
FIBRE GLASS நுண்ணிழைக் கண்ணடியில் செய்யப்பட்ட நாகரிகமான வீட்டுத்தளவாடங்கள், பூச்சாடிகள், சமயலறை-குளியலறை உபகரணங்களுக்கு——
நல்லூர் காட்சிச்சாலை
ஆதீனத்துக்குமுன்
நல்லூர்
FIBERITE MOULDINGS
தம்பசிட்டி, பருத்தித்துறை.
Phone: 590. [0689]

விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆவணி 8 ஷவ்வா 23 இதழ் 191
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 24-8-1981

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8174

## ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிளவு நிரந்தரமாகிறது?

# சமாதானத்துக்கு இடமில்லை!

# சிறிமா கூறுகிறார்

## பதின்மூன்று பேரிடமும் விளக்கம் கோரிக் கடிதம்

(நமது சிறப்பு நிருபர்)

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குழுவுக்கும், திரு. மைத்திரிபால சேனநாயக்கா - திரு. அனுரா பண்டாரநாயக்கா குழுவுக்குமிடையே ஏற்பட்ட பிளவை சரிக்கட்டி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை மீண்டும் ஒரே தலைமையில் கொண்டுவர எடுத்துக்கொண்ட சகல முயற்சிகளும் தோல்வியில் முடிந்துவிட்டதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து நம்பப்படுகிறது.

இதனை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா ''சமாதானத்துக்கு இடமே இல்லை'' என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும், இவர் தலைமை மீது அதிருப்தியுற்ற பதின்மூன்று பேர் கொண்ட திரு. மைத்திரிபால சேனநாயக்கா - திரு. அனுரா பண்டாரநாயக்கா குழுவுக்கும் இடையே பிளவு ஏற்பட்டதும்; இப்பிளவு, அண்மையில் கட்சித் தலைமையகத்தைக் கைப்பற்றுவதில் ஏற்பட்ட இழுபறியைத் தொடர்ந்து விரிவடைந்ததும் தெரிந்ததே.

அதேநேரத்தில் கட்சி நலன் விரும்பிகள் சிலர், இரு குழுக்களுக்குமிடையே சுமுக உறவைக் கொண்டுவருவதில் தீவிர முயற்சிகள்மேற்கொண்டனர். இதன் அடிப்படையில் திரைமறைவில் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றன.

நிலைமை இவ்வாறிருந்தபோதிலும், கட்சித் தலைமைப் பிளவு தவிர்க்க முடியாததாகி விட்டதாக இப்பொழுது அறியப்படுகிறது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இதுபற்றி இரண்டு தினங்களுக்கு முன்னர் கருத்து வெளியிடுகையில் சமாதானப் பேச்சுக்கே இடமில்லை என்றும், கட்சியை

[6-ம் பக்கம் பார்க்க]

## ''யாழ். பலநோக்குக் கூட்டுத்தாபனம் அமைக்கப்பட வேண்டும்''

### அபிவிருத்தி சபையில் பண்டிதர் கா. பொ. பிரேரணை

[யாழ்ப்பாணம்]

''அபிவிருத்தி வேலைகளைத் திறமையாகச் செய்வதற்கு இப்பொழுதுள்ள சூழ்நிலையில் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திசபை 'யாழ். பலநோக்குக் கூட்டுத்தாபனம்' ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கோரும் பிரேரணையை ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், யாழ். மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

மாவட்ட அபிவிருத்திசபைக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெறவிருக்கிறது.

''சமநல சேவை நிலையங்

[6-ம் பக்கம் பார்க்க]

## சிமெந்து உற்பத்தி அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் சிமெந்து உற்பத்தி அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு 185 மட்ரிக் தொன் சிமெந்து விற்பனை செய்யப்படுவதாக கூட்டுறவு தாபன விற்பனை முகாமையாளர் திரு. சாதுசிகாமணிப் பிள்ளை தெரிவித்துள்ளார்.

[6ம் பக்கம் பார்க்க]

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் துர்மதி வருடம் ஆவணித்திங்கள் 15-ம் நாள் (31-8-81) திங்கட்கிழமை காலை 9-15 மணி முதல் 11-15 மணி வரையுமுள்ள துலாலக்கின சுபயோக சுபமுகூர்த்தத்தில்,

| | |
|---|---|
| எமது புதல்வன்<br>திருநிறைச் செல்வன்<br>நகுலேஸ்வரன்<br>அவர்களுக்கும்<br>[பொறியியலாளரும்<br>தொழிற்சாலை அதிபரும்,<br>அஸ்பெஸ்டஸ் சீமெந்து<br>தொழிற்சாலை லிமிட்டெட்<br>சுவிஸ், சுன்னாகம் | எமது புத்திரி<br>திருநிறைச்செல்வி<br>குணராணி<br>அவர்களுக்கும் |

மருதடியான் துணையால் மருதடிப் பிள்ளையார் கோவிலில் நிகழும் இத்திருமண வைபவத்தில் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து மணமகனில்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் பங்குபற்றும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்

மணமகன் இல்லத்தில்
செவ்வாய்க்கிழமை 1-9-81 மாலை 5 மணிக்கும்
மணமகள் இல்லத்தில்
புதன்கிழமை 2-9-81 மாலை 5 மணிக்கும்
நடைபெறும்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்
திரு. அ. நாகராஜாவும் திருமதி சி. சேனுதிராஜா

| | |
|---|---|
| பாரியாரும்<br>யாழ்ப்பாண வீதி,<br>மானிப்பாய். | ''புனிதபவனம்''<br>பொற்பதி வீதி,<br>கொக்குவில் கிழக்கு. |

0715

உங்கள் முதலீட்டிற்கு 27% வரை
வட்டி வழங்குகின்றோம்
அத்துடன் உங்களுக்கு
★ ஆயுள் காப்புறுதி இனம் ★ வீட்டுப்பாவனைப் பொருட்கள் [பணம் கொடுப்பனவு தவணை அடிப்படையில்]
நாம் உங்களுக்கு 41 வருடங்களாகச் சேவை செய்துவருகின்றோம் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம்.
★ நம்பிக்கை ★ பாதுகாப்பு ★ ஸ்திரத்தன்மை
வடமாகாணத்திலேயே ஆகக்கூடிய முதலீட்டாளர்களைக் கொண்ட ஒரே ஒரு தனியார்துறை நிதிநிறுவனம்
TFC
த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
191, 249 இ, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம், போன்: 7680

# வரி விளம்பரம்

## பயிற்சி

தகுந்த தொழில் பயிற்சி பெற்று வெளிநாடு செல்லுங்கள். நவீன முறையில் Electric & Gas வெல்டிங் IEE முறைப்படி இலெக்ரிக் வயறிங், PMG Certificate பயிற்சிகளுக்கு National Institutes, 57, பரமேசுவரா வீதி, யாழ்ப்பாணம். 0645

## விற்பனைக்கு

மானிப்பாய் சுகாதார நிலையத்தோருக்கு அருகில் 2 பரப்புக் காணி வீடு பயன்தரும் மரங்களுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு வி. கே. மகாலிங்கம் C/O நாதனின் நவீன சந்தை யாழ்ப்பாணம் போன்: 7540 [0698]

திருநெல்வேலி தெற்கு சிவன் கோவில் வீதியில் 16/24 இலக்கம் உடைய இறிய வீடும் கிணறுமுட்பட ஒரு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். சு. அம்பலவாணர் சட்டத்தரணி புத்தூர். 0704

## தேவை

பிரபல்யமான விளையாட்டுப்பொருள் உற்பத்தி செய்யும் ஸ்தாபனமொன்றிற்கு தைத்தல் வேலை பழக விரும்பும் பெண்கள் தேவை. விண்ணப்ப முடிவு திகதி 2-9-81 விளம்பர இல: 0706 கே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 0706

## கல்வி

இலக்கண அமைப்பு முறையூடு ஆங்கிலம் வாசிக்க, எழுத, பேச, (இலக்கண வரம்புக்கமைய) பரீட்சைகளில் திறமைச் சித்திபெற கற்பிக்கப்படும். 4மாத அட்சித்தியான போதனை பிரத்தியேக கவனம் செலுத்து முகமாக மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளது. விரைந்து பதிந்து கொள்ளுக. பதிவு ஆரம்ப திகதி:- 29-8-81 க்கு முன் பெற்றோருடன் வந்து நேரடி தொடர்புகொள்ளவும். J. M, Jayaratnam- Sal நகரவிபூர், மானிப்பாய். 0708

## தவறிவிட்டது

சுப்பையா நாகேந்திரத்தின் உணவுமுத்திரை அடையாள அட்டை பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஆகியவை கிளிநொச்சிக்கும் பளைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அனுப்பி வைக்கவும். சு. நாகேந்திரம். R. C. வீதி. மந்துவில். கொடிகாமம். 0716

## வெற்றுத்தகரம்

ஐப்பசிற்கு மேற்படி 45 கலன் வெற்று தகரம் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் மீள அளிக்கப்படாத ரூபா. 2/- செலுத்தி நிபந்தனைகளையும், விண்ணப்பப்படிவத்தையும் பெற்றுக்கொள்ளலாம். வைப்புப்பணம் ரூபா. 50/-செலுத்த வேண்டும். முடிவு திகதி 26-08-81.

பொதுமுகாமையாளர்
பூநகரி ப. நோ. கூ. சங்கம்,
பூநகரி. 0713

சரணடைந்த...

(5-ம் பக்க தொடர்ச்சி)
துச்செல்வதற்கும் அனுமதி வழங்கினர். வல்வெட்டித்துறைப்பொலிசார் சந்தேக நபர்களின் வாக்கு மூலங்களை பதிவுசெய்வதற்கும் சான்றுப் பொருட்களை மீட்டுக்கொள்வதற்குமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

## விளம்பரம்

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்(வ/து)
பருத்தித்துறை

## பதவி வெற்றிடம்

பாண் தயாரிப்பாளர்கள்

மேற்படி சங்கத்தின் பேக்கரிப்பகுதியில் கடமையாற்றுவதற்கு ஆகக்குறைந்தது ஐந்து வருடம் (பிரபல பாண் தயாரிப்பு நிலையத்தில்) சேவை அனுபவமுள்ள பாண் தயாரிப்பாளர்கள் தேவை.

விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அனுபவச் சான்றிதழ். நற்சான்றுப் பத்திரங்கள் ஆகியவற்றின் பிரதிகளுடன் இணைத்து பதிவுத் தபால் மூலம் "தலைவர் பருத்தித்துறை ப. நோ, கூ. சங்கம் பருத்தித்துறை" என்ற விலாசத்திற்கு 04-09-81 திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,
பரு. ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.
1981-08-19. 0712

# மரண அறிவித்தல்

## வள்ளியம்மாள்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற அம்மான் செல்லத்துரையின் அன்பு மனைவி வள்ளியம்மாள் காலமானார். இவர் காலஞ்சென்ற குமாரவுத்தரி, மகேஸ்வரி. இராசரத்தினம், காலஞ்சென்ற தங்கேஸ்வரி, திலகேந்திராசா (Chartered Accountant), இலிங்கம், அருள்பிரகாசம் ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற ஜெயராசா, காலஞ்சென்ற கிருஷ்ணசாமி, சிவேசானந்தன், திலகராசா ஆகியோரின் மாமியாரும். ஆழிக்குமரன் ஆனந்தன், சண்முகானந்தம், இந்திரன், வசந்தகுமாரன் ஆகியோரது பாட்டியுமாவார். அன்னாரது ஈமக்கிரிகைகள் நாளை (25-8-81) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு காட்டுப்புலம் மயானத்தில் நடைபெறும். உற்றாரும் நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

காட்டுப்புலம், தொண்டைமானாறு. 0717

# யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

வழங்குநர் பதிவுசெய்தல் 1-9-81 — 31-12-81

பின்வரும் பொருட்களை வழங்குவதற்கு இச்சபையோடு தம்மைப் பதிவுசெய்துகொள்ள விரும்பும் பிரசித்திபெற்ற வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக்கொண்டுள்ள காகித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வழங்குநர்களைப் பதிவுசெய்தல் (1-9-81—31-12-81)" எனக்குறிப்பிட்டு 31-8-81 ஆம் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ இதன்கீழ் கையொப்பமிட்டுள்ளவருக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுதல்வேண்டும்.

| விடயங்கள் | பதிவுக்கட்டணம் |
|---|---|
| 1. எழுது கருவி வகைகள் | 50/- |
| 2. அச்சிட்ட பொருட்கள் | 50/- |
| 3. சௌக்கியப் பொருட்கள் | 50/- |
| 4. சேவை இணைப்புக்கள் விநியோகக் கம்பிகள் உப மின் நிலைய உபகரணங்கள், தெருவிளக்கேற்றல் முதலிய வற்றுக்கான மின்பொருட்கள் | 100/- |

பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் நிரலிலிருந்து வழங்கலைக் கூறுவிலைகள் கோரப்படும். எனினும் அவசியமாகக் காணுமிடத்து வேறு வழங்குநர்களிடமிருந்து விலைகள் கோரி கொள்வனவு செய்யும் உரிமை சபைக்குண்டு. வேண்டப்படும்போது விலைகள் சமர்ப்பிக்க அல்லது கொள்வனவு ஆணை விடுக்கப்படும்போது உரிய காலத்தில் வழங்கத்தவறும் அல்லது வழங்கப்பட்ட பொருட்கள் விபரக்கூற்றுக்கு அல்லது மாதிரிகளுக்கு இசைவற்றவையாக இருக்கின்ற வழங்குநர்களின் பதிவுகள் அறிவித்தலின்றி பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும்.

தேவநேசன் நேசையா
செயலாளர்,
யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை.
அபிவிருத்திச் செயலகம்,
யாழ்ப்பாணம்,
18-8-1981. 0714

ஓம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் துர்மதி வருடம் ஆவணி மாதம் 10-ம் நாள் (26-8-81) புதன்கிழமை பகல் 9-00 மணி முதல் 11-30 வரை உள்ள புனர்பூச நட்சத்திரம் கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எனது புத்திரன் திருநிறை செல்வன் **செல்லையாபிள்ளை** (சுந்தரன்) அவர்கட்கும் | எமது ஏக புத்திரி திருநிறை செல்வி **தங்கராணி** அவர்கட்கும் |

மணமகள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்குத் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திருமதி நா. குமாரசாமி, உடையார் வளவு, இருபாலை, கோப்பாய். | திரு. திருமதி திருச்சிற்றம்பலம், தெல்லிப்பளை கிழக்கு, தெல்லிப்பளை. |

0696




### மணிவாக்கு

பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்து வாழ்க்கை இல்லாதவாறுபோல, ஜீவகாருண்யம் இல்லாதவன் மோட்ச உலகத்தில் வாழ்வு பெறமுடியாது.

—திருவள்ளுவர்

# நமது நோக்கு

## கிராமிய அபிவிருத்தி

நேற்று வடமராட்சியில் வதிரியில் நடைபெற்ற சமூக-பொருளாதார ஆய்வுக் கருத்தரங்கின் முடிவுகள் எமக்கு இன்னும் கிட்டாதபோதும் இது ஒரு சாதாரண பொழுதுபோக்குப் போன்ற நிகழ்ச்சியென்று கருதமுடியாது.

நிகழ்ச்சி நிரலையும் பங்குபற்றும் பேச்சாளர்களையும் பார்க்கும்போது, இது பயன்தரக்கூடிய முயற்சியெனப் படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கைத்தொழில் அபிவிருத்திச்சபை, மக்கள் வங்கி, பனம்பொருள் அபிவிருத்திச்சபை, சிறு கைத்தொழில்கள் நிலையம், யாழ் மாவட்ட விவசாய உற்பத்தியாளர் சங்கம், அரசாங்க திருவாகசேவை போன்ற தொடர்புடைய பல துறைகளில் கைதேர்ந்த நிபுணர்கள் ஆய்வுரைகளிலும் கருத்துப் பரிமாறலிலும் கலந்துகொண்டனர்.

ஒரு குறிப்பிட்ட கிராமத்தை பிடிகையாகக் கொண்டு, பொருத்தமான புள்ளி விபரங்களைச்சேமித்து போதிய ஆயத்தத்துடன் ஒழுங்கு பண்ணப்பட்ட கருத்தரங்கென்பது எமது நம்பிக்கை. இது செயற்படவும், இவ்வித பயன்தரும் முயற்சிகள் பரவவும் மக்கள் ஒத்துழைக்கவேண்டும்.

எமது மாவட்ட அபிவிருத்தி அலுவல்கள், பேச்சிலேயே பெரும்பாலும் வளர்ந்துவந்திருக்கின்றன. பலவகையிலும் செயலில் உறங்கவேண்டியகாலம் எங்கள் வாசலில் வந்து நிற்கின்றது.

கிராமம் வாழ்ந்தால் நாம் வாழலாம் என்ற சித்தாந்தத்தை நாம்ஏளனம்பண்ணி ஒரு சுருட்டுப்பெட்டியுடனும், சில நல்லெண்ணைப் போத்தல்களுடனும் தென்னிலங்கையில் முகாமிட்டு, பொருள்தேடி, இங்குவந்து தேவையற்ற டாம்பீகமான வீடுகள் அமைத்து வாழ்ந்த காலம் பழமையாகிவிட்டது. அதையிட்டு கண்ணீர்விட வேண்டிய அவசியமில்லை.

எங்கள்மக்களுக்கும் அவர்களின் வருங்காலச் சந்ததியினருக்கும் நாம் வாழும் கிராமங்கள் சுதந்திர வாழ்வையளிக்கும் தன்னிறைவு காண நாம் திட்டமிட்டு உழைக்க சிறு கிராமிய விவசாயம், குடிசைக் கைத்தொழில் தொடக்கம்-கட்டுநாயக்காவிலுள்ளசுதந்திர வர்த்தகவலயம் வரைக்கும் திட்டங்கள்பரந்துபட்டு வளம்பெற இவ்வித கருத்தரங்குகள் வழிகாட்டவேண்டும்.

பல புதிய வழிகளில் தொழில் வெற்றி சிறக்கும் வதிரி யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய கிராமங்களைத் தட்டி எழுப்பும்வகையில் முன்மாதிரியாகுமென்பது திண்ணமாம்.

தமிழ் மக்களின் சுதந்திரத்துக்கு இதுவே ஆணிவேரெனலாம்.

## பாராட்டுக்குரிய நூல் வெளியீடு!

ஒரு கானகத்தில் மிருகங்களின் மாநில மாநாடு கூடிற்று. அதில் தலைமை தாங்கிய சிங்கம் 'விலங்கு நண்பர்களே! உயிர்வாழ்க்கைக்கு ஆடை அவசியமா? மோட்டு மனிதர்கள் ஆடைக்கு அனாவசியமாகச் செலவிடுவது அறிவின்மையாகும் அது வருந்தத்தக்கது'' என்று கூறிற்று.

இதுபோல இன்றைய மனிதன் 'வாழ்க்கைக்குக் கடவுள் வணக்கம் தேவையா' என்று வினவுவான்.

மானம்உள்ளவன் ஆடை உடுப்பான். மனம் உள்ளவன் இறைவனை வணங்குவான். விலங்குகட்கும் மனிதனுக்கும் இட்ட எல்லைக்கல் இறைவழிபாடென்பதே எங்கள் சமயத்தில் அடிப்படைக்கருத்தாகும்.

இந்த அடிப்படைக் கருத்தில் உருவான சிறந்த நூல் கந்தபுராணம். இதனை யாழ்ப்பாண மக்களுக்கு விளக்கத்தேவையற்றகாலம் ஒன்றிருந்தது. அந்த நூலின் உட்பொருளில் உருவான கலாசாரம் வடபகுதி மக்களின் அரிய சொத்தாகக் கருதப்பட்ட காலம் வாழ்க்கைமாறுபாட்டால் மங்கியது.

மீண்டும் இந்த மாவட்ட ஆன்மீகஅபிவிருத்திக்கு அது அவசியம் தேவை என்ற காலம் வந்துவிட்டது.

இத்தப் பின்னணியில் நாவலர்பெருமான் எழுதிய கந்தபுராண வசனத்தை அச்சிட்டு நல்லூர்க் கந்தனின் கார்த்திகைவிழாவன்று வெளியிட்ட நாவலர் சபை பாராட்டுக்குரியது.

மக்கள் மத்தியில் இது அவசியம் பரவசூழ்நிலை ஏற்றதாகவுள்ளது. 600 பக்கங்கள் கொண்ட இப்பெரிய நூல் படிப்போருக்கு எளிதில் புரியும், ஆயினும் அதன்விலை அதிகமானபடியால் பணவசதியற்றவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சபை உதவவேண்டும்.

இந்த அரிய கலாசார வாழ்விலிருந்து நெடுந்தூரம் விலகிவாழும் நாம் நன்றி கொன்ற பாவத்திற்கு ஆளாகின்றோம். அதனால் உய்வில்லை என்பதையும் உணரக்கூடிய நிலையில் தள்ளப்பட்டிருக்கின்றோம்.

இப்போது நாம் அபிவிருத்திபற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம்; நன்றி மறந்தால் வரும் பெருங்கேடு எல்லாவற்றையும் அழிக்கும் என்ற ஒருசிறந்த அறத்தை இப்புராணம் வற்புறுத்துகின்றது. எங்கள் முந்தையோர் வாழ்வில் இது ஒரு வாய்ப்பாடமாகவிருந்தது.

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற இன்றைய அறம் எங்களை எங்கே கொண்டுபோகிறது. ஆன்மீக அடிப்படையில் அத்திபாரம் சரியில்லாவிட்டால் பொருளாதார அபிவிருத்தியால் பயன் என்?

சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் இந்நூலைப் பற்றிக்கூறியது இவ்வாறு: பொருளாலும் அளவாலும் தமிழ் நூல்கள் யாவற்றினுஞ்சிறந்தது. சிவஉபாசனையின் பெருமையையும், சிவநிந்தனையின் கொடுமையையும், உயிர்கள் உய்யும் வழிகளையும் விளக்குதலே முதல் நோக்கமாகக்கொண்டது.

எங்கள் கிராமங்களின் மூலைமுடுக்குகளின் கந்தபுராணம்-சிறப்பாகக் கோவில்களில் புராணபடனம் மீண்டும் ஊற்றெடுத்தால் நாம் இன்றைய அபாயநிலையிலிருந்து மீட்சிபெயலாம்.

# 'சிந்துமதமே இந்துமதமாக மாறியது'

## 'சோ' கருத்து

(நமது நிருபர்)

''ஸ்ரீலங்காவிலுள்ள சிங்களவர், தமிழர் பிரச்னையைப்பேசி, மற்றவர்களுக்கு கெடுதல்செய்யாமல் இருக்கவே விரும்புகிறேன். இந்தியாவுக்கு விஜயம்செய்யும் அயல் நாட்டவர், இந்தியாவை விமர்சனம் செய்ய முனைகின்றபோது, எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமோ, அதைப்போல இன்றைய நெருக்கடியில் இங்கு நான்இருக்கின்றேன்''

இவ்வாறு இலங்கை வந்துள்ள 'துக்ளக்' பத்திரிகை ஆசிரியரும், நடிகரும், அரசியல் விமர்சகருமான, "சோ" யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில், இலங்கை காந்தி சேவா மன்றமும், இந்து இளைஞர் மன்றமும் கூட்டாக இணைந்து நடாத்திய கலைவிழாவில், பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

இவ்விழாவிற்கு டாக்டர் எஸ். குமரகுருபரநாதன் தலைமை தாங்கினார்.


திரு. சோ, தொடர்ந்து உரையாற்றுகையில் ''என்னை இங்கு பலர் அரசியல்வாதியென்று விமர்சித்தார்கள். என்னைப் பொறுத்தவரையில், பாமரமக்களும் அரசியலைப் புரிந்துகொள்வதற்கு வசதியாக தணிச்சலாக, பல அரசியல் விடயங்களை விமர்சித்து வருகின்றேனேயொழிய, இன்றுவரை நான் எந்த அரசியல் கட்சியிலும் அங்கத்தவனாக இருந்ததில்லை. அரசியலில் நியாயமானதையும்; அநியாயமானதையும் விமர்சித்து வருகின்றேனேயொழிய யாருக்கும் கெடுதல் செய்யவில்லை, செய்யப்போவதுமில்லை.

''அரசியல்வாதி யென்பவனுக்கு. அந்த நாற்காலியில் அமர்ந்துவிட்டால் எப்போதுமே ஆபத்து, கதிரையை விட்டு எழும்பினாலும் அந்தக் கதிரை பறிபோய்விடுமே என்ற ஆபத்து அந்தக் கதிரையில் அமர்ந்திருந்தாலும், ஆபத்து எனவேதான், நம்மை நாம் நெருக்கிக்கொண்டு வாழவேண்டுமேயொழிய, நெருக்கடியை தோற்றக்கூடாது. நாம் நம்பிக்கை இழந்த சமுதாயமாக வாழாமல் தன்னம்பிக்கை கொண்ட சமுதாயமாக வாழவேண்டும்.

''ஒருவனுக்கு மொழியிலே வெறி தோன்றுமானால், மொழியை அவனால் வளர்க்க முடியாது, அவன் மொழியை கொலைதான் செய்வான். மொழியிலே பற்றுள்ளவன் தான் மொழியை வளர்க்கக் கூடியவன். தமிழர்கள் மத்தியில், எப்போதுமே பலவீனம் இருக்கத்தான் செய்கிறது. பக்கத்து வீடு தீப்பற்றி எரிகின்றபோது. பக்கத்து வீடு தானே எரிகிறதென பாராமுகமாக இருந்துவிடுவான். ஆனால் தனது வீடு, எப்போது தீப்பிடிக்கும் என்பதை சிந்திக்க மறந்து கோழையாகிவிடுகின்றான் இந்தியாவைவிட்டு அயல் நாடுகளில் பணிபுரியும், எத்தனையோ தமிழர்களை அந்த நாடுகளிலுள்ள மக்கள் எவ்வாறு பாராட்டுகின்றார்கள். இவர்களது, கூர்மையான மூளையை, அவர்கள் எவ்வாறு பாராட்டுகின்றார்கள். ஆனால் இந்த பத்துப்பேர்ஒன்றாக நின்றால் ஒரு காரியத்தைச் சாதிக்க முடியாது கோழையாகிவிடுகின்றனர்.

''எந்தமதத்துக்கும், இல்லாத தனித்துவம், இந்துமதத்திற்கு உண்டு. இந்து மதத்தை ஸ்தாபித்தவர், யாரென்பது இதுவரை யாரும்அறிந்ததில்லை சிந்துநதிக்கரையில் வாழ்ந்த மூத்தகுடி தழுவிய மதமென்பதால் சிந்துமதமென வழங்கப்பட்டது. காலப்போக்கில் சிந்துமதமே இந்துமதமாக மாறியது.

(6ம் பக்கம் பார்க்க)



### இன்று நல்லூர்க் கந்தன் 20-ம் திருவிழா

விழிக்குத்துணை திரு மென் மலர்ப்பாதங்கள்
மெய்ம்மை குன்றா மொழிக்குத்துணை முருகா
வெனு நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்த தனி
வழிக்குத்துணை வடிவேலுஞ்
செங்கோடன் மயூரமுமே.

—கந்தர் அலங்காரம்.


# வியாபாரிகளே! இதோ உங்களுக்கொரு மேலான பலன்

# சுப்பசக்

## நெய்யப்பட்ட பொலியுரேயிலின் சாக்குகள்

நெல், அரிசி உபதானியங்கள், கோழி, பால்ப்பண்ணை மற்றும் பலவித பொருட்களை மூட்டையாக்குவதற்கு சுப்பசக் பொலியுரேயிலின் சாக்குகளுக்கு இலங்கை பூராவும் நல்ல தேவை ஏற்பட்டுள்ளது. இத்தேவையை பூர்த்திசெய்ய எமக்கு வியாபாரிகள் தேவை. அதுவும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பிரபலமான வியாபாரிகள் தேவை. நீங்கள் இத்தகுதியுடையவராக இருந்தால் இத்துடன் உள்ள கூப்பனைநிரப்பி எமக்கு அனுப்பிவையுங்கள். நாம் உங்களுடன் தொடர்பு கொள்வோம்.

மைக்கிறிஸ் இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்
81, வோாட் பிளேஸ்
கொழும்பு - 7

கூப்பன்

சுபசாக் விற்பனையாளர். ________
________
விலாசம் ________
________
________
ஸ்தாபனத்தின் பெயர் ________
________

## சுப்பசக்-சணல் சாக்குக்கு விடை கொடுத்து விட்டது

RJA 930

## பொன்விழா ஏற்பாடு

(அரியாலை)

கிறிஸ்தவ மிஷனரியான சகோதரி எலிசபத் பேக்கர் அம்மையாரின் மிஷனரி ஊழியத்தின் 50வது ஆண்டு பொன் விழா வைபவம் செப்டம்பர் மாதம் 6-ந் திகதி பாந்தன் நவஜீவனத்தில் கொண்டாடப்படவிருக்கிறது. (ஐ)

## அபிவிருத்திச் சங்கம்

(அரியாலை)

நல்லூர் உதவி அரசாங்க அதிபரின் கிராம அபிவிருத்தி சபை உத்தியோகத்தரின் அனுசரணையுடன் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயண மாதர் அபிவிருத்திச் சங்கம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. (ஐ)

## இலவச விநியோகம்

(யாழ்ப்பாணம்)

ஆறுமுகநாவலர் எழுதிய சைவ அனுஷ்டான விதி என்ற புத்தகத்தை சமய தீட்சை வைக்கின்ற மன்றங்களுக்கு யாழ். மின்கலவற் ஸ்தாபனத்தார் ! இலவசமாக வழங்குகின்றார்கள்.

## மூன்றுமாதக் கடுழியம்

(சாவகச்சேரி)

சைக்கிள் ஒன்றை நம்பிக்கை மோசடி செய்ததாக ஜெயராம் என்ற வாலிபனுக்கு எதிராக சாவகச்சேரிப் பொலிசார் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி திரு. சி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே நீதிபதி மூன்றுமாதக் கடுழியச் சிறையுடன் 5 வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார். (ஐ)




விவசாயிகளே!
இதோ புதுமையான
சாக்கு

சுப்பசக்
நெய்யப்பட்ட
பொலியுரேபிலின் சாக்குகள்

50% மூட்டையாக்கும் செலவைக்குறைக்கிறது
வலுவானது, நீடித்துழைப்பது
மிகநேர்த்தியானது, மிகப்பகட்டானது
மிகப்பார்வையானது
அச்சிடக்கூடியது
காற்றுஉள்செல்லக்கூடியது
கையாளச்சுலபமானது

தினமும் செலவுத்தானம் கூடிவரும் இவ்வேளையில் உங்களது மூட்டையாக்கும் செலவுகூட இலாபத்திற்கும் நட்டத்திற்கும், வளர்ச்சிக்கும், வீழ்ச்சிக்கும் இடையே உள்ள வித்தியாசத்தைக்காட்டும்.

நீங்கள்நெல், அரிசி உபதானியங்கள், கோழி அல்லதுபால்ப் பண்ணை நடத்துபவராக இருந்தால் இதன்வித்தியாசத்தை நிச்சயம் உணர்வீர்கள்.

இங்குதான் சுப்பசக் பொலிபுரோ பிலின்சாக்குகள் எவ்வளவு முக்கிய தேவையானவை என்பதை உணர்வீர்கள் சுபபசக் மென்மையானது, வலுவானது துப்புரவானது அடுக்க வசதியானது, மூட்டையாக்க இலகுவானது கையாளுவது சுலபமானது, பார்வைக்கு அழகானது.

இது மட்டுமல்ல தயக்கமின்றி சாக்குத்தைக்கும் ஊசி நூல் கொண்டு தைக்கலாம்.

வழுக்கும் தன்மையில்லாதது, அச்சடிக்கக் கூடியது. இதனல்தான் சுப்பசக்சூப்பர் சாக்காகிறது.

MIKECHRIS
மைக்கிறீஸ் இன்டஸ்ரீஸ் லிமிடட்
மைக்கிறிஸ் குழுவின் கூட்டு நிறுவனம்
81, வோர்ட் பிளேஸ் கொழும்பு - 7. தொலைபேசி: 98633 - 4, 98359

Supasak

A 929

மட்டுநகர் பல்கலைக்கழகக் கல்லூரி

# திட்டமிட்டபடி அக். 5-ல் ஜனாதிபதி திறந்து வைப்பார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி அக்டோபர் மாதம் ஐந்தாம் திகதி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினால் திறந்துவைக்கப்படுமென்று கல்லூரி முதல்வர் திரு. ஆர். இராஜரெட்னம் "ஈழநாடு" நிருபருக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: மட்டக்களப்பு வளாகக் கல்லூரி இவ்வருடம் ஆரம்பிக்கப்படமாட்டாதென்று (விஷமத்தனமான முறையில் வதந்தி ஒன்று எழுந்துள்ளது. இதில் எந்தவித உண்மையும் இல்லை.

இக்கல்லூரி அக்டோபர் மாதம் 5-ம் திகதி திட்டமிட்டபடி ஆரம்பிக்கப்படும். இதற்காக உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பேராதனை வளாகத்துடன் இணைந்து செயல்படும் இவ்வளாகத்தில் விவசாயம், விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகள் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் (தெரிவுசெய்யப்படுவார்கள். இவர்கள் தங்கள் பரீட்சையை பேராதனை வளாகத்தில் எழுதி அங்கு பட்டம் பெறுவர். (அ)

# பொலிஸார் மீதான வழக்கு தள்ளுபடி

(மாவிட்டபுரம்)

சங்கானை பொலிஸ்நிலையத்தில் கடமையாற்றிய இரு பொலிஸ் உத்தியோகஸ்தர் கள்மீது, நபர் ஒருவரைத் தாக்கி படுகாயப்படுத்தியதாக தொடரப்பட்ட வழக்கு சாட்சிகள் சமூகமளிக்காததால் தள்ளுபடி செய்யப்பட்டு எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

சங்கானையைச் சேர்ந்த சபாரத்தினம் இராசேந்திரன் என்பவரை பொல்லால் தாக்கி படுகாயம் விளைவித்ததாக சங்கானைப் பொலிஸ் நிலையத்தில் சார்ஜண்டாகக் கடமையாற்றிய கிருஷ்ணர் குலசிங்கம், கான்ஸ்டபிளாகக் கடமையாற்றிய விஜயசுந்தர ஆகிய இருவர் மீதும் இவ்வழக்கில் குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

மல்லாகம் நீதிமன்றத்தில் மஜிஸ் நீதிபதி திரு. ரி. தம்பிரத்தினம் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது வழக்காளி தரப்பில் ஆஜரான யாழ். பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் கிருஷ்ணராஜா சாட்சிகள் சமூகமளிக்காமையால் தவணை தருமாறு கேட்டார்.

இதனை எதிரிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆட்சேபித்தார். முன்னரும் பல தடவை வழக்காளி தரப்பினருக்கு தவணை வழங்கியதை சுட்டிக்காட்டி சம்பவம் நடந்து ஒன்றரை வருடங்கள் சென்றுவிட்ட நிலையில் இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் தற்காலிக வேலைநீக்கத்தில் இதுவரை இருந்து வருவதால் மேலும் தவணை வழங்குவது சரியல்லவென்றும் விசாரணையை ஆரம்பிக்கவேண்டும் அல்லது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்றும் கோரினார்.

இறுதியில் பதில் நீதிபதி திரு. ரி. தம்பிரத்தினம் மேலும் தவணை வழங்க முடியாதெனக் கூறி வழக்கை தள்ளுபடி செய்து எதிரிகளை விடுதலை செய்தார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், மு. திருநாவுக்கரசு, கே. விக்னராசா, ரி. சூரியகுமார் ஆகியோர் ஆஜராகினர். வழக்காளி தரப்பில் யாழ். பொலிஸ் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணராசா ஆஜரானார். (அ)

'இந்து மதமே...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"வேதங்கள் யாவற்றிலும் எவரும் தீண்டத்தகாதவர் என்று கூறப்படவில்லை. மனிதகுலமே ஜாதிகளை உருவாக்கி இந்துமதத்தை சீரழியவைத்துவிட்டது. தமிழகத்தில் ஹரிஜனங்கள், முஸ்லிம்களாக மாறியதற்கு முக்கிய காரணம் அவர்கள் ஹரிஜனங்கள் என்ற போர்வையில் தாங்கொணா கொடுமைப்படுத்தப்பட்டதால் கொடுமையிலிருந்து மீட்சிபெறுவதற்காகவே மதம் மாறினர். தமிழன் எங்கு வாழ்ந்தாலும் ஜாதியின் பெயரால் கொடுமைப்படுத்துவதை நீக்கவேண்டும் என்றார். சபையிலிருந்து பலர் பல கேள்விகளைக்கேட்டனர்.

"தமிழகத்தில், எம். ஜி. ஆருக்குத்தான் சற்று செல்வாக்கு அதிகம் என்றும் அது எப்படியிருக்கும் என்று கூற முடியாதென்றும் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் சோ கூறினார். இன்னொரு கேள்விக்கு, பிராமணர் என்று குறிப்பிடுவதற்கு வேதத்தில் கூறப்பட்டவிதிகளுக்கு அமைய நடந்துகொள்பவர். யாருமில்லையென்றார்?

அதனால் தன்னை பிராமணர் என்றும்கூற விரும்பவில்லை என்றும் அவர் சொன்னார்.

யாழ்ப்பாண சம்பவம் குறித்து விரிவான கட்டுரையொன்றை எழுதவிருப்பதாக தெரிவித்த அவர், அது எந்த மொழியில் எழுதுவேன் என்றோ; எப்போது எழுதுவேன் என்றோ கூறமுடியாது என்றார்.

விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்ப்பாண மாநகர மேயர் திரு. இராசா விசுவநாதன் உரையாற்றுகையில்; சோவின் துணிச்சலான அரசியல் கருத்துக்களைப் பாராட்டிப் பேசினார்.

அபுதாபி உதவியுடன்

# மன்னாரில் மீன்பிடித் துறைமுகம்

(மன்னார்)

மன்னாரில் அபுதாபி அரசாங்கத்தின் உதவியுடன் நிறுவப்பட்டு வரும் மீன்பிடி துறைமுகவேலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வேலைகள் கடந்த சிலமாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

மூதூர் எம். பீயும் மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப். எம். ஈ. எச். மஹ்றூப் எடுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து மீன்பிடி துறைமுக வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி துறைமுகத்துடன் கடல் தொழில் விரிவாக்க அலுவலகமும் மீன்பிடி கூட்டுத்தாபன இனை ஐஸ் உற்பத்தி தொழிற்சாலை என்பனவும் இங்கு நிறுவப்பட்டு வருகிறது.

## விமான விபத்து 100 பேர் பலி

தைவான், ஆக. 22

தைவானில் உள்ளூர் சேவையில் ஈடுபட்டிருந்த விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி அதில் பயணம் செய்த 100 பேரும் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 33பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இவ் விமானத்தில் பயணம் செய்தோரில் 16 ஜப்பானியரும் 2 அமெரிக்கரும் ஏனையோர் சீனர்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

வெளிநாடு செல்ல

# பணமில்லை என்றார் தாயார்; மைந்தன் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

வெளிநாடு செல்வதற்கு தாயார் பணம் கொடுக்காததினால் மனமுடைந்த 5 மகன் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

சங்கானை நிற்சாமத்தைச் சேர்ந்த ஆசை சின்னத்தம்பி பின் (22 வயது) மரண விசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

யாழ். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

இந்த வாலிபர் வெளிநாடு செல்வதற்கு அடிக்கடி தாயாரிடம் பணம் கேட்டு வந்ததாகவும், கஷ்டநிலை காரணமாக தாயார் பணம் கொடுக்க முடியாதிருந்ததாகவும், சம்பவ தினமும் அவர் தாயாரிடம் பணம் கேட்டபின்னர் அறைக்குள் சென்று நச்சுத்திராவகம் அருந்தியதாக விசாரணையில் கூறப்பட்டது.

உடனடியாக முதற்சிகிச்சையளிக்கப்பட்டபின், யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

சிமெந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தொழிற்சாலையில் சிமெந்து உற்பத்தி அதிகரித்திருந்தாலும் 'பெர்மிட்' முறையிலேயே சிமெந்து விற்பனை செய்யப்படுகிறது. இதற்கு பாவனையாளர் அதிகரித்திருப்பதே காரணம் என கூறப்படுகிறது. (மா)

## பத்திரிகைத் தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை இப்பொழுது அமுலில் உள்ளது.

## இப்படியும் நடக்கிறது

யாழ்ப்பாணத்தில் உயர் கல்வியோடு சம்பந்தப்பட்ட ஒரு நிறுவனத்தில் 'அல்லி ராஜ்யம்' கொடிகட்டிப் பறக்கிறதாம்!

எல்லாம் தெரிந்தவர்கள்போல் இந்த 'அல்லி'கள் பாவனை செய்து, சுற்று நிருபங்களுக்கு தவறான விளக்கங்கள் கொடுத்து வருவதால் அப்பாவி ஆசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின் ஒரு பொக்கிஷமாகக் கருதப்படும் இந்த நிறுவனத்தில், பெண் விடுதலையை ஆதரிப்பவர்கள் கூட 'இவர்கள்' கொட்டம் அடங்காதா என்று வாய்விட்டுக் கூறுகிறார்கள்!

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி வரும் 'மெயில்' யாழ்ப்பாணம் வந்துசேர்ந்ததும் பலர் — "அப்பாடா மெயில் வந்திற்று......" என்று நிம்மதிப் பெருமூச்சு விடுவதை நன்றாக அவதானிக்க முடிகிறது.

— ஊடுருவி

"சித்த ஆயுர்வேத அதிகாரிகளுக்கு

# சிங்களத் தேர்ச்சி நிபந்தனை விதிவிலக்கு வேண்டும்"

## சம்மேளனம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"தமிழ்ப் பிரதேசங்களில் கடமையாற்றும் சித்த ஆயுர்வேத அதிகாரிகளுக்கு சிங்களத் தேர்ச்சி நிபந்தனையிலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும்."

வட இலங்கை சித்த ஆயுர்வேத மருத்துவர்கள் சம்மேளனக் கூட்டம் யாழ். செயலகத்தில் நடைபெற்றபோது மேற்குறிப்பிட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

உள்ளூராட்சி மன்ற சித்த ஆயுர் மருத்துவர்கள் சங்கம் இத்தீர்மானத்தைக் கொண்டு வந்தது.

டாக்டர் எஸ். பி. ஈ. இன்னுசித்தம்பி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்களாவன:

"ஆயுர்வேத இலாகாவினால் ஆயுர்வேத மருந்துகள் 75 வீதமும், ஏனைய மருந்துகள் 25 வீதமும் மாவட்ட வைத்திய சாலைகளில் பாவிக்கப்பட வேண்டும் என்ற சுற்று நிருபம் தமிழ்ப் பிரதேசம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கே பொருத்தமானது. தமிழ் பிரதேசங்களில் சித்த மருந்துகளே பாவிக்கப்படவேண்டும். இதற்குரிய பணத்தை பொறுப்பான அமைச்சு ஒதுக்க வேண்டும்.

"சித்த ஆயுர்வேத மருத்துவ அதிகாரிகளால் வழங்கப்படும் வைத்திய அத்தாட்சிப் பத்திரங்கள், உள்ளூராட்சி ஊழியர்களுக்கு மட்டுமே 14 நாட்களுக்கு வழங்கலாம் என்ற சுற்று நிருபத்தை மாற்றி உள்ளூராட்சி சேவை எல்லா இலாகாக்களாலும் அனுமதிக்கப்படலாம் என்று திருத்தப்படவேண்டும்.

"எமது சேவையைத் தரப்படுத்தி, தகுதி, வாழ்க்கைச் செலவுக்கேற்ப சம்பளத் திட்டம் அமைக்க வேண்டும்."

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா, திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசன், மாவட்ட சபை உறுப்பினர் திரு நடராசா ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (மா)

யாழ். பலநோக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் ஊடாக நேரடியாக விவசாயிகளுடன் தொடர்பு கொண்டு இயங்குகின்றமையாலும் கிருமிநாசினிகள், உரவகைகள், விதை இனங்கள் ஆகியவற்றின் விற்பனையால் கிடைக்கும் சிறு இலாபத்தின் மூலம் நிலையத்தை நிர்வகிக்க வேண்டியிருப்பதனாலும் விவசாயிகள் விவசாயம் செய்யப்படும் நிலங்கள் ஆகியவற்றின் விபரங்களை வைத்திருக்கின்றமையாலும் இந்நிலையங்களே எல்லாவிதமான விதைபொருட்களையும், விதை இனங்களையும் நேரடியாக விவசாயிகளுக்கு விநியோகிக்கவேண்டும்" என்ற பிரேரணையை அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. நா. இராசேந்திரன் இக்கூட்டத்தில் கொண்டுவர முன்னறிவித்தல் கொடுத்துள்ளார். (மா)

சமாதானத்துக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் நாசப்படுத்தி விட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

குறிப்பிட்ட பதின்மூன்று பேரிடமும், எட்டு விஷயங்கள் குறித்து திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இப்பொழுது விளக்கமும் கேட்டுள்ளார்.


## மரண அறிவித்தல்

### கமலாம்பிகை

குமாரசுவாமிப்புலவர் முத்துக்குமாரசுவாமிப் பிள்ளையின் மனைவியும் மங்கையர்க்கரசி, (அரசினர் கலாசாலை கோப்பாய்), சிவசோதி, (இராமநாதன் கல்லூரி), குமாரசாமி, கடதாசிக் கூட்டுத்தாபனம், கொழும்பு. காலஞ்சென்ற சந்திரசேகரம், மாவட்ட நீதிமன்றம் மல்லாகம். ஆகியோரின் தாயாரும், திருச்சிற்றம்பலம், ப. நோ. கூ. சங்கம், சங்கானை, துரைசிங்கம், வருமான வரி இலாகா, பரமேஸ்வரி இராஜேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், யமுனா, வாகீசன், குமரேசன், குமாரசூரியர் ஆகியோரின் பாட்டியுமான கமலாம்பிகை 23-8-81 காலமானார். இன்று (24-8 81) காலை 10-00 மணிக்கு புலவரகம், மயிலணி, சுன்னாகத்தில் அன்னாரது ஈமக்கிரியைகள் நடைபெறும்.

கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

"புலவரகம்"
மயிலணி, சுன்னாகம்.

0719


இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஹு மீ ஆகஸ்ட் 24-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100235/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.